www.padippakam.com

13 இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 438 ● 1993 ஆகஸ்ட் 13 வெள்ளிக்கிழமை

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளை
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்
25வது ஆண்டு நிறைவு
1968—1993
கூட்டம்: செப்டம்பர் 12 பி.ப 2 மணி
அட்டன் நகர மண்டபம்
கண் காட்சி: காலை 10 மணிக்கு ஆரம்பம்
முடிவில் படக்காட்சி: ஸார் முதல் லெனின் வரை
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்,
இளம் சோசலிஸ்டுகள்

# இனவாத யுத்தத்தின் புதிய சோவினிச பிரச்சாரம் உக்கிரம்

## ஐ.நா.வை தலையிடக் கோரும் இரத்தக்களரி திட்டம் முன்வைப்பு

மணலாறு—ஜனகபுர இராணுவ முகாம்களில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து யூஎன்பி அரசாங்கமும், முதலாளித்துவ சி,ல.சு.க.தலைவியும், மற்றும் இனவாதக் குழுக்களும் ''விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முழு நாட்டையும் யுத்த நிலையில் வைக்க வேண்டும்'' என்ற 'யுத்த அரசாங்க' பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

கிளாலி கடலேரி உட்பட்ட யாழ்ப்பாணப் பிராந்தியம் பூராவும் ஷெல் அடிகளும், குண்டு வீச்சுக்களும் கடற்படைப் படகுகளின் தாக்குதல்களும் உக்கிரமடைந்துள்ள நிலையில் இனவாத ஊதுகுழலான 'ஐலன்ட்' பத்திரிகை யூஎன்பி அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு காட்டி ஆசிரியத் தலையங்கம் தீட்டியது: 'இன்றுள்ள ஒரே மூலோபாயம், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதே. இதற்கு இராணுவம் பதிலடியிலிறங்க வேண்டும். ஆனால் அதற்கு இராணுவத்துக்கு அரசியல், இராணுவத் தலைமையை வழங்குவதோடு உயர்ந்த ஊக்குவிப்பை வழங்க வேண்டும். ஆனால் இன்றுள்ள நிலைமை அதுவா?' (ஜூலை 30) எனக் கேட்டிருந்தது.

இந்த 'ஐலன்ட்' பத்திரிகை நிறுவன யுத்த வெறியர்கள், இதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் இனவாதக் கூச்சலுக்குப் பேர் போன சித்தலகம சிலாலங்கார பிக்குவின் பேட்டியை பிரசுரித்தனர். யுத்தத்தினை வெல்ல வேண்டுமானால் சகல அரசியல் கட்சிகளும் 'தற்காலிகமாக' தடை செய்யப் பட்டு, பௌத்த பாஞ்சாலைகள், கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்களின் நிதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி, அந்நிதியைக் கொண்டு யுத்தங்களை நடாத்த வேண்டும் என இப்பிற்போக்குப் பிக்கு கூறியதாகச் செய்தி வெளியிட்டனர். இத்துடன் நின்றுவிடாமல் நாட்டில் யுத்த நிலைமையை உருவாக்க ஒரு 'மன்னன்' நியமிக்கப் பட வேண்டும் என இந்த இனவாதி கோரியிருந்தான்.

மணல் ஆறு — ஜனகபுர முகாம்கள் நாசமாக்கப்பட்டதற்கு அனுதாபச் செய்தி அனுப்பிய முதலாளித்துவ சி.ல.சு.க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, 'விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முழுநாட்டையும் முழு யுத்த நிலையில் வைக்க வேண்டும்' எனக் கூறியிருந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் யோசனையின் அர்த்தம் ஒரு யுத்த அரசாங்கம் அல்லது ஒரு இராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட வேண்டும் என்பதே.

யாழ்ப்பாணத்தில் குண்டு வீச்சு திரும்பவும் ஆரம்பமாவதற்கும், கிளாலியில் கடற்படையினரால் எண்மர் கொல்லப்பட்டதற்கும் இரு தினங்களுக்கு முன்னர் (ஜூலை 25) பலாலியில் ஆயுதப்படைகளின் முன்நிலையில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ''பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு பேச்சுவார்த்தை நடைமுறைக்குள் நுழைய விடுதலைப் புலிகளுக்கு இன்னமும் கதவுகள் திறந்துள்ளன'' எனவும் வடக்குக் — கிழக்கை கைப்பற்றும் திட்டம் நிறுத்தப்பட மாட்டாது எனவும் ''யுத்தத்தினை நிறுத்துவதன் மூலம் ஏனைய மாகாணங்களில் பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார அபிவிருத்தியை வடக்கு—கிழக்கிலும் ஏற்படுத்த முடியும்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.''

### 'அனைத்துலகி அமைப்பின் தலையீடு'

இதற்கிடையே சில முதலாளித்துவக் குழுக்கள் 'பொருத்தமான அனைத்துலக அமைப்பின் தலையீட்டை' பெற்றுக் கொள்ளும்படி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கத் தொடங்கியுள்ளன. இதில் 1987ன் பிற்போக்கு இந்திய - இலங்கை உடன்படிக்கையினைத் திணித்த மாஜி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா முன்னணியில் நிற்கின்றார். 'நான் ஆட்சியில் இருந்திருந்தால் யுத்தத்தில் வெற்றியீட்டியதன் பின்னரே இந்திய இராணுவத்தினைத் திருப்பி அனுப்பியிருப்பேன்' எனக் கூறியதன் மூலம் வெளிநாட்டு ஆக்கிரமிப்புப் படைகளை மீண்டும் அழைப்பதன் முக்கியத்துவத்தினை இவர் சுட்டிக் காட்டத் தொடங்கினார்.

சிங்கள முதலாளித்துவ இனவாதிகள் மட்டுமன்றி வங்குரோத்து தமிழ் தேசியவாத தலைவர்களும் இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு 'வெளிநாட்டு உதவிகளை நாடுவதில் ஒன்றும் சோடை போனவர்கள் அல்லர் என்பதை விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு காட்டிக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளால் பிரசுரிக்கப்படும் 'ஹொட் ஸ்பிரிங்' பத்திரிகை ஏகாதிபத்திய ஆதரவுடனான தனி நாட்டுக்கு வக்காலத்துவாங்கி எழுதியதாவது.'' ''சிறீலங்கா அரசாங்கம் புதிய உடன்

(14ம் பக்கம் பார்க்க)

# மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல் படிப்பினைகள்..

(12ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் எதிராக ஒரு சுயாதீனமான அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள்வதே. சர்வதேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும், ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் காட்டுமிராண்டிச் சுரண்டல்களுக்கும், ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் அச்சுறுத்தல்களுக்கும் எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்படுவதற்கான பாதை இதுவே.

''தொழிலாளர் அமைப்புக்களின் உச்சியில் குந்திக்கொண்டு இவற்றை முதலாளித்துவ அமைப்புக்களாக பரிணாமம் அடையச் செய்யும் முதலாளித்துவ வேலைத்திட்டங்களைப் பரப்பும் அதிகாரத்துவங்களை தோற்கடிப்பதன் மூலம் மட்டுமே தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் விடுதலை பெற முடியும். வடக்கு—கிழக்கு தொழிலாளி வர்க்கத்தினை தெற்கின் தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுத்துவதன் மூலமும, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் மூலமுமே யூஎன்பி ஆட்சியை வெளியேற்றி, ஒரு தமிழீழம் —இலங்கை சோசலிசக் குடியரசு வடிவிலான ஒரு தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை நோக்கி முன்செல்ல முடியும்''.

இப்பிரேரணையின் வேலைத்திட்டப் பிரிவானது ''தொழிலாளர், வேலையற்றோர், கிராமிய ஏழைகளின் ஒரு பேராளர் மகாநாட்டைக் கூட்டவும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல், அமைப்புச் சக்தியைப் பலப்படுத்தவும் தனியார்மயம், ஆட்குறைப்பு, சமூக நலன் புரிச் சேவை வெட்டு, கிராமிய பயங்கரம் இனவாத யுத்தம், ஆகியவற்றை எதிர்க்கவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்து சகல ஒடுக்குமுறை சட்டங்களையும் அகற்றவும் வர்க்கப் போராட்ட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவும் '' அழைப்பு விடுத்தது.

சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கும் தோட்டத்துறை தொழிலாளர்களின் குடியுரிமைக்கும், வடக்கு—கிழக்கில் இருந்து ஆயுதப்படைகளை வாபஸ் பெறவும், உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களின் அனைத்துலக ஐக்கியத்துக்குப் போராடவும் இது அழைப்பு விடுத்தது. இங்கு நிறைவேற்றப்பட்ட மற்றுமோர் பிரேரணை சுதந்திர வர்த்தக வலயத்தில் மரணமான கொரியா—சிலோன் கம்பனி தொழிலாளியின் மரணம் தொடர்பாக ஒரு சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கும் அழைப்பு விடுத்தது.

உலக நிலைமையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் வர்க்க உறவுகளில் பாரிய துருவப்படுத்தல்களை உண்டுபண்ணும் நிலைமையில் புகக, மத்திய வங்கி ஊழியர் சங்கத்துக்கு அதன் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டமையை ஒரு ஆழமான அரசியல் மாற்றமாகக் கொள்கின்றது. உலக சோசலிசத்தினை முன்நோக்காகக் கொண்ட ஒரு பாட்டாளி வர்க்க அனைத்துலகக் கட்சியே உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அரசியல் வழிகாட்ட முடியும். அக்கட்சி, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலமே.

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்தின் புதிய சோவினி..

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கையை மீறியதன் மூலம் பொது மக்களின் குரல்வளையை நெரித்து, படடினியில் தள்ளி இராணுவத் தீர்வு காணும் எதிர்பார்ப்பு அம்பலமாகியுள்ளது....இடைக்கிடையே மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டாலும் உதவி வழங்கும் நாடுகள் உதவி வழங்குவது இந்தக் கொடிய அரசாங்கத்துக்கே... இன்று நன்நெஞ்சம் படைத்த மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் உள்ள ஒரே வேலைத்திட்டம் சுதந்திர தமிழீழம் அரசாங்கம் அமைப்பதற்கு ஆதரவளிப்பதே.''

இந்த சிங்கள, தமிழ் முதலாளிகளின் முடிவு கிட்டும் வரை புதிய காலனிகளை நிறுவும் திட்டத்துக்குக் காத்திராமல் ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய ஐ.நா. படைகள் இன்றே குதிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்துடன் ஏகாதிபத்திய மையங்களில் பொறுக்கி எடுத்த ஒரு நோபல் பரிசாளர்கள் குழு இலங்கை வந்துள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா, பெல்ஜியம், நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த நால்வர் குழு இந்த ''இலங்கையில் சமாதானத்துக்கான ஐந்து அம்சத் திட்டத்தினை'' ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கவிடம் சமீபத்தில் கையளித்துள்ளது. 'உலக ஐக்கியத்துக்கான உலக சபை'யினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்வுப் பத்திரம் ''உலக சபை, இலங்கை அரசாங்கத்தினையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினையும் ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு மத்தியஸ்தம் வகிக்க ஒரு சிறப்பு பிரதிநிதியை அனுப்புமாறு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தினை அழைக்குமாறு வேண்டுகின்றது.'' எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

சோமாலியா, ஈராக், பனாமா, கிரனடா தொட்டு இன்றைய பொஸ்னிய இரத்தக் களரிகள் வரையில் ஐ.நா, செயலாளர் நாயகத்தினதும். பாதுகாப்புச் சபையினதும், ஐ.நா. கண்காணிப்புப் படைகளதும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் 'மனித உரிமை காப்பு' என்ற பதாகையின் கீழேயே ஆரம்பமாகி வளர்ச்சி கண்டுள்ளமை வர்க்க நனவுள்ள மக்களுக்கு நினைவிருக்கும்.

ஆளும் யூஎன்பி அரசாங்கப் பிரமுகர்கள் இந்தத் திட்டத்தினைத் தாம் இப்போதைக்கு வரவேற்பதற்கில்லை என கூறிக் கொண்டாலும் இத்திட்டம் இன்றைய 'பதட்ட' நிலையைத் தணிப்பதற்கு அன்றி தமது திட்டத்துக்கு ஆதரவான எந்தவொரு சாராரிலும் சார்ந்து கொண்டு —அரசாங்கமாக இருக்கலாம் அல்லது அரசாங்கத்துக்கு வெளியே உள்ள முதலாளித்துவ பகுதியினராக இருக்கலாம் அல்லது தமிழ் தேசிய குழுக்களாக இருக்கலாம்— வடக்கு—கிழக்கில் மட்டுமன்றி நாடு பூராவும் அடிமைச் சுரண்டலுக்கு வாய்ப்பான இரத்தக்களரி மோதுதல்களை சிருஷ்டிப்பதே திட்டம். இந்த ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கான பிரச்சாரமும் அணிதிரள்வும் ஒரு விபத்து அல்ல எனவும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு செயல் திட்டத்தின் அங்கமெனவும் ஜூலை 9ம் திகதிய 'தொழிலாளர் பாதை'யில்' குறிப்பிடுகையில் நாம் கூறியதாவது: (நியூயோக் டைம்ஸ் வாசகர் கடிதங்கள்) .... இதில் விநோதம் என்ன வென்றால் இம்மூன்று கடிதங்களுமே ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கான அழைப்புக்களுடன் முற்றுப் பெற்றது தான். பிரச்சினை தலையீடு இல்லாமல் தீர்க்கப்படாது என முதலாவது எழுத்தாளர் குறிப்பிட்டார், இரண்டாவது கடிதம் 'சர்வதேச உறவுகளில் சில நெறிமுறைகளைக் கொணர ... அனைத்துலகச் சமூகத்துக்கு (குறிப்பாக மேற்கு) அழைப்பு விடுத்தது. மூன்றாவது 'யூகோசலாவியாவில் இத்தகையதொரு நிலைமையில் தலையிடுவதைப் பொறுத்தமானதெனக் கண்ட அனைத்துலகச் சமூகம் மரணத்தையும் அழிவையும் தடுக்க இலங்கையில் தலையிட்டாக வேண்டும்' எனப் பிரகடனம் செய்தது''.

இந்த நோபல் பரிசாளர்களின பிரச்சாரம் ஏகாதிபத்திய மையங்களில் ஒன்றான டொரான்டோவில் இருந்து ஆரம்பமாகியுள்ள போதிலும் நாம் மேலே குறிப்பிட்ட நியூயோக் டைம்ஸின் வாஷிங்டன் சதிகளுக்கும்இவர்களின 'ஐந்து அம்ச சமாதானத் திட்டத்துக்கும்' நிச்சயம் உறவுஉண்டு என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கிறது.

தமிழ்தேசியஇனத்தினருக்கு எதிரான இந்த கொலைகார யுத்தத்துக்கு முடிவுகட்டவும், தமிழ் ஒடுக்கப்படுவோரின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவும், ஏகாதிபத்தியஇராணுவத்தலையீட்டை தவிர்க்கவும், காலனித்துவச் சுரண்டலை ஒழிக்கவும், ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை தாங்கிப் போராட தொழிலாளி வர்க்கத்தினால் மட்டுமே முடியும். அதற்கான வேலைத்திட்டமும் அதனிடமே உள்ளது. வடக்கு — கிழக்கு— தெற்கு மாகாணங்களின் தொழிலாளர் ஒன்றிணைந்து அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவுடன் ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ அணிதிரட்டி, ஏகாதிபத்தியச் சார்பு இனவாத முதலாளித்துவ ஆட்சியை ஒழித்து— தமிழ் - சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் கூட்டாக வாழும் நிலைமையைச் சிருஷ்டிக்க வேண்டும். இதற்கான ஒரே வேலைத்திட்டம், இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சியில் அமர்த்துவதே.

கழிந்து செல்லும் இனவாத யுத்தத்தின் ஒவ்வொரு நாளும் இந்த வேலைத்திட்டத்துக்குப் போராட வேண்டிய தன் மாபெரும் அவசியத்தினை உறுதி செய்கின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இவ் வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. இந்த வேலைத்திட்டத்துக்குப் போராட புகக வில் சேரும்படி இலங்கை— தமிழீழம் பிராந்தியங்களுள் வாழும் வர்க்க நனவு கொண்ட தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை வேண்டுகின்றோம்.

## உலக நெருக்கடி உக்கிரம்...

(9 ம் பக்கத் தொடர்ச்சி)

### உடனடிக் காரணி

இந்த நாணயக் கிளர்ச்சிக்கான உடனடிக் காரணி என்ன? தத்தமது நாணய அலகுகளைத் தூக்கிப் பிடிக்கவும் செலாவணி வீத பொறிமுறையுள் தொடர்ந்து இருந்து வரவும் பிரான்சும் மற்றைய நாடுகளும் ஜேர்மனியில் இருக்கும் உயர்ந்த வட்டி வீதங்களைக் கடைப்பிடிக்கும்படி

பாரிஸ் அரசாங்கமும், மற்றும் அரசாங்கங்களும், ஐரோப்பிய வங்கி அதிகாரிகளும் விடுத்த வேண்டுகோளுக்கிடையேயும் புண்டஸ்பாங்க், கணிசமான அளவில் வட்டி வீதத்தினை வெட்ட மறுத்து விட்டது. ஜேர்மன் ஆளும் வர்க்கம் ஜேர்மனியின் பணவீக்க வீதத்தினை வெட்டிக் குறைக்கும் முகமாக ஆழமான வட்டி வீதத்தினைக் கடைப்பிடித்து வருகின்றது. இது ஜேர்மனி இணைப்பின கடும் செலவு காரணமாக இன்னமும் சுமார் 5% ஆக உள்ளது.

இதே சமயம் ஐரோப்பிய போட்டியாளர்கள் தாம் ஜேர்மனியின் மறு இணைப்புக்குச் செலவு செய்து வருகையில் அது(ஜேர்மனி) கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னாள் சோவியத் யூனியனின் உள்ளும் மேலாதிககத்துக்குத் துடித்து வருகின்றது எனக் குற்றம் சாட்டியுள்ளன. அந்தரங்கமாக நடைபெற்ற ஐரோப்பிய சமூக நிதி அமைச்சர்கள் மகாநாட்டில் பிரான்சு, ஜேர்மனி கிழக்கு ஜேர்மனியைக் கையேற்றதால் ஏற்பட்ட பணவீக்க, நிதிப் பிரச்சினைகளை சமாளிக்கும் வரைஅது செலாவணி வீத பொறிமுறையில் இருந்து விலகிக் கொள்ளட்டும் எனக் கேரியது. ஆனால் இந்தக் கோரிக்கை ஏனையோரின அங்கீகாரத்தினைப் பெறவில்லை. இந்தச் சூடேறிய விவகாரம் பற்றிப் பேசிய ஜேர்மனி அதிகாரி ஒருவர் செலாவணி விகித பொறிமுறையில் இருந்து ஜேர்மன டியூச்சர்மார்க்கினை வெளியே தள்ளுவது 'சோலார் முறையை சூரியன் இல்லாமல் முயல்வது போன்றதாகும்' எனறுள்ளது,

இந்தக் கசப்பான வார்த்தைப் பிரயோகங்கள் வெறும் தனிப்பட்ட குரோதத்தின் விளைவோ அல்லது குறுகிய காலக் கொள்கை மோதுதல்களோ அல்ல. இவை கடந்த இரு உலக யுத்தங்களும் வெடிப்பதற்குக் காரணமாக இருந்த முதலாளித்துவ அமைப்பின் உள்ளேயான புறநிலை முரண்பாடுகளைக் குறித்து நிற்கின்றது. அந்த விதத்தில் இந்தச் செலாவணி விகிதாசாரப் பொறிமுறையின் வீழ்ச்சி ஒரு நாணய நெருக்கடிக்கு அப்பாற்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இந்த முரண்பாடுகளை ஒழுங்கு செய்ய ஏகாதிபத்தியச் சக்திகள் கையாண்ட பொறிமுறைகளின் வீழ்ச்சியைக் குறிக்கின்றது. முதலாளித்துவம் மீண்டும் ஒரு தடவை பொருளாதார வீழ்ச்சி, ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மோதுதல், யுத்தம் கொண்ட ஒரு புதிய காலப்பகுதியூடாகச் சக்கரம் அற்ற வண்டியில் சறுக்கிச் செல்கின்றது. தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பணி, இந்த வங்குரோத்து அமைப்பைத் தூக்கி வீசுவதும் உலக சோசலிசத்தினை நிர்மாணிப்பதுமே.

## இவ்விசாரணை பிரேமலால்...

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

'தாய்வானில் இவற்றின் தலைமைக் கம்பனிகள் வங்குரோத்து அடைந்து வட்டி கட்டாததால் வங்கி இக்கம்பனியைச் சுவீகரித்துக் கொண்டுள்ளது. இலங்கை பக்டரிகளில் முடிவுப் பொருட்களை செய்யும் மூலப்பொருட்களை அனுப்புவது நின்று போயிற்று ஏப்ரல் மாதத்தில் இருந்து பக்டரி தொழிற்படவில்லை. மே 2ம் திகதி நிர்வாகிகள் நிலையான சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு ஓடிச் சென்றுள்ளனர். இன்று எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி இக் கம்பனி இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகளில் இருந்து பெற்றுக் கொண்டுள்ள கடன், இந்த நிலையான சொத்துக்களின் பெறுமதியை விட அதிகமானது,''

இந்த ரீ. கே. பாஸ்ட்னர் பக்டரியிலும், ரீ.கே.பிரெயிஷன் இன்டஸ்ரியல் கம்பனியிலும் முறையே 517, 405, ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததோடு, இந்த ஊழியர்கள் தாய்வான் பக்டரி தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ள அதே தலைவிதிக்கே முகம் கொடுத்துள்ளனர் எனவும் விலானி பீரிஸ் சுட்டிக் காட்டினார்.

''இந்தப்பேரழிவுக்கு உலக தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தின் மூலமே முகம் கொடுக்க முடியும் என்பதை இந்த சுயாதீன தொழிலாளர் விசாரணை அம்பலப்படுத்தும்; ஊர்ஜிதம் செய்யும். 'பன்னாட்டுக் கம்பனிகளின் முழு நிலைமையையும் இந்த விசாரணை மூலம் அம்பலப்படுத்துவோம், இலாபத்துக்கான உற்பத்தி மூலமான முதலாளித்துவ உற்பத்தி முறையின் காட்டு மிராண்டித்தனத்தின் நிஜ நிலைமையை அம்பலப்படுத்துவது உலக தொழிலாளர் வர்க்கத்தின் தனவினை உயர்த்த கைகொ

(16ம் பக்கம் பார்க்க)


தொழிலாளர் பாதை வெளியீடு

**1983 யூலைத் தமிழர்கள் எப்படி காட்டிக் கொடுக்கப்பட்டார்கள்.**
-கீர்த்தி -பாலசூரியா-

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னோக்கும் பணிகளும்.**
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை. 10.10.1986.

**ஸ்ராலினிசமும்,ரொட்ஸ்கிசமும்.**
-டேவிட் நோர்த்- ஆகஸ்ட்.23.1987..

**இந்திய இலங்கை ஒப்பந்தமும்,புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகத்தின் பணிகளும்.**
நான்காம் அகிலத்தின் அதைத்துலகக் குழுவின் அறிக்கை. நவம்பர் 11,1987.

பெற்றுக் கொள்ளவேண்டிய முகவரி

**Tholilar Pathai. Postfach 1609,
74321 Bietigheim-Bissingen.**


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51-ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# அடிப்படைக் கொள்கைகளுக்கும்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

யாகும் என அவற்றிற்கு எதிராக எச்சரிக்கை செய்து, பு.க.க, போராடியது.

அச்சமயத்தில் பு.க.க. பிரசுரித்த 'கம்கறு புவத் (தொழிலாளர் செய்தி) பத்திரிகைக்கு 'ஜனதா விமுக்தி பெரமுனையின் அரசியலும் வர்க்கத் தன்மையும்' என்ற கட்டுரைத் தொடரை எழுதத் தோழர், கீர்த்தி முன்வந்ததற்குக் காரணம், ட்ரொட்ஸ்கியின் 'நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படை அம்சங்களை மீண்டும் ஆய்வு செய்வதன் மூலம். குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் பக்கம் இடம்பெறும் சகல பாணியிலான சரணடைவுகளுக்கும் எதிரான ஒரு போராட்ட நடவடிக்கையாகவே, ஸ்டாலினிச சீர்திருத்தவாத (சமசமாஜக் கட்சி போன்ற) துரோக அதிகாரத்துவங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமையை ஸ்தாபிதம் செய்து கொண்டு, அந்த உறுதியான புரட்சிகரச் சக்தியைச் சூழ அணிதிரள்வதைத் தவிர, இளைஞர் உட்பட்ட ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறவே முடியாது என்பதை அவர் அக்கட்டுரைத் தொடரில் நன்கு தெளிவுபடுத்தினார். ஜேவீபி யின் முதலாளித்துவச் சார்பு, குட்டி முதலாளித்துவ அரசியலினை அம்பலப்படுத்திய அதே சமயம், அது வர்க்கச் சமரச கூட்டரசாங்க அரசியலுக்கு எதிராக அனைத்துலக ரீதியில் சுயாதீன தொழிலாள வர்க்க வேலைத் திட்டத்துக்கான அரசியல் அத்திவாரத்தினையும் தயார் செய்தது.

## சுயாதீனத் தொழிலாளி வர்க்க அரசியல் முன்நோக்கு

அந்த அடிப்படையானது இந்தியத் துணைக் கண்ட தொழிலாளி வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் சுயாதீன தொழிலாளி வர்க்க அரசியல் முன்நோக்கினை உறுதியான முறையில் அபிவிருத்தி செய்ய பு.க.க. வுக்கு வழிவிட்டுக் கொடுத்தது. 197 ல் இந்தியாவைப் பிரிக்கும் 1947 திட்டத்துக்கு எதிராக பங்களாதேஷ் மக்கள் கிளர்ந்து எழுந்தபோது, பாகிஸ்தான் சர்வாதிகாரத்துக்கும் இந்திரா காந்தி அரசாங்கத்தின் இராணுவ தலையீடுகளுக்கும் எதிராக இந்தியத் துணைக் கண்டத் தொழிலாளி வர்க்கத் தலையீட்டுக்கு அழைப்பு விடுத்தது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. இது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சிகளைத் தூக்கி வீசவும், பங்களாதேஷ் முஜிபூர் றஹ்மானின் முதலாளித்துவ தேசியவாத இயக்கத்துக்கு எதிராகச் சோசலிசக் குடியரசினை நோக்கிச் செல்லவும் துணை கண்டத்தில் தொழிலாளி வர்க்க, ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகரக் கூட்டின் அவசியத்தினைத் தோற்றுவித்தது. அதில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமையின் சார்பில் தோழர், கீர்த்தி பாலசூரிய. பிரித்தானிய சோசலிச லேபர் லீக்கின் தலைமை கடைப்பிடித்த விதிமுறையை வன்மையாகக் கண்டனம் செய்தார், அப்பத்திரங்கள், சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியின் கிளையென்ற முறையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சிகரப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுக்கும் தயாரிப்பினையும் அரசியல் முதிர்ச்சியினையும் கொண்ட ஒரு கட்சியாகும் என்பதை சர்ச்சைக்கு இடமின்றிச் சுட்டிக் காட்டியது,

## 1970—77 கூட்டரசாங்கத் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டம்

அன்று இலங்கையினுள் அமைக்கப்பட்டிருந்த முதலாளித்துவ சிறீலங்கா—சமசமாஜ—கம்யூனிச கூட்டரசாங்கம், இன்று நவசமசமாஜக் கட்சியின் உச்சியில் உள்ளவர்களின் ஏகோபித்த ஆதரவுடன் 1972 இனவாத, பௌத்த மதவாத, அரசியலமைப்புச் சட்டத்தினை இயற்றிய போது, தமிழ் தேசிய இனத்தினரின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் பொருட்டு, தொழிலாளி வர்க்கத்தினை அணிதிரட்ட முன்நின்றது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. பு.க.க, அங்கத்தவர்களை தலைமையில கொண்ட அரசாங்க அச்சக ஊழியர் சங்கம், அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராகப் பிரேரணையொன்றை நிறைவேற்றியதோடு, ஏனைய தொழிலாளர்களை இனவாதக் கூட்டரசாங்க அரசியலில் இருந்து உடைத்தெடுக்க முன்நின்றது. இந்தப் பாவத்துக்காக சமசமாஜக் கட்சித் தலைவர்கள் அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தினை தமது தொழிற்சங்க சம்மேளனத்தில் இருந்து வெளியே தள்ளினர். சி. ல. சு. க, யூஎன்பி இனவாத கொலைகார நடைமுறைகள் பலம் பெற்றது இத்தகைய சமசமாஜ துரோகிகளின் துணையோடுதான்.

முதலாளித்துவ இனவாத அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு தொழிற்சங்கங்களையும், தொழிலாளர்களையும் அணிதிரட்ட பு.க.க. நடாத்திய போராட்டம், தொழிலாளி வர்க்கத்தினை சின்டிக்கல்வாதத்தில் இருந்து பிரித்து, அதன் வரலாற்று புரட்சிகரப் பாத்திரத்தின் அடிப்படையில் நிற்கவைக்கும் ஒரு போராட்டமாகியது. அது 1948ல் இருந்து 25 ஆண்டுகள் பூராவும் துரோக அதிகாரத்துவங்களால் தொழிலாளி வர்க்கத்தின் மேல் இறுக்கப்பட்ட சங்கிலியை உடைத்து எறியும் போராட்டமாகியது, யுத்தத்தின் பின்னைய பண வீக்கச் செழிப்பின் அடிப்படையில் 1948ல் நிறுவப்பட்ட சுதந்திர அரசு எனப்பட்டதும், பாராளுமன்ற ஜனநாயகத்தினதும் மோசடிகளுக்கு அடிபணிந்து போன தொழிற்சங்க அதிகாரத்துவங்கள், பெரிதும் சலுகைகள் கொண்ட தொழிலாளர் பிரிவினரை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் வர்க்கம் தோள் கொடுக்க வேண்டிய முழு வெகுஜனங்களையும் உள்ளடக்கிய புரட்சிகரப் பணியில் இருந்து தொழிலாளி வர்க்கத்தைத் தள்ளி வைத்தனர், பாராளுமன்ற ஆசனங்களின் பேரில் தொழிலாளி வர்க்கத்தின் சுயாதீன வர்க்கப் பணியினை கைகழுவி விட்டமை ஆளும் வர்க்கம் குடியுரிமை மசோதாவின் கீழ் வாக்குரிமை இல்லாமல் செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை சமசமாஜ—ஸ்டாலினிசத் தலைவர்கள் ஒதுக்கித் தள்ளியதன் மூலம் நன்கு தெளிவாகியது. இந்தத் துரோகத்தின் துணையோடுதான் இதொகா வும் தொண்டமானும் தமது ஆளுமையை தோட்டத் தொழிலாளர்களிடையே கட்டி எழுப்ப முடிந்தது, கிராமப்புற ஏழைகளதும், வேலையற்ற இளைஞர்களதும், பிரச்சினை, தொழிலாளி வர்க்க அமைப்புக்களதும், தொழிற்சங்கங்களதும் பிரச்சினை இல்லாமல் போயிற்று. இந்தக் காட்டிக் கொடுப்பினால் கிராமப்புற மக்கள் யூஎன்பி — சி. ல. சு, க. முதலாளித்துவக் கட்சிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டனர்.

இதன் பெறுபேறாக தொழிற்சங்க சின்டிக்கல் வாதத்தினுள் அடைபட்டுப் போய், தாம் சார்ந்த துறையின் சலுகைகளைப் பற்றி மட்டும் அக்கறை காட்டப் பழக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம், அரசியல் ரீதியில் முடக்கப்பட்டதோடு குழப்பியடிக்கப்பட்டு, மனமுறிவுக்குள்ளும் தள்ளப்பட்டது. இந்தப் பின்னணியின் அடிப்படையிலேயே வர்க்கச் சமரச கூட்டரசாங்க அரசியல் இறுக்கமடையச் செய்யப்பட்டது. இதன் பின்னர் கூட்டரசாங்க அரசியலின் கீழ் தொழிலாளி வர்க்கம் அணிதிரண்டிருந்த தொழிற்சங்கங்களையும் கூட உடைத்துக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதிதீவிர வலதுசாரி யூஎன்பி தமது அரசாங்கத் தொழிற்சங்கங்களை அல்லது ஜூண்டா சங்கங்களை அமைக்க இதுவே வழிதிறந்தது.

கூட்டரசாங்கம் 1971ல் கட்டவிழ்த்த இளைஞர் படுகொலைகளுக்கும் வேட்டைக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்தினை அணிதிரட்டப் போராடியதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. ஜேவீபி மீது விதிக்கப்பட்ட தடையுடன் சேர்த்து, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக பத்திரிகைகளான 'கம்கறு புவத்', 'தொழிலாளர் செய்தி', 'இளைஞர் செய்தி' யும் சட்ட விரோதமாக்கப்பட்டன. பு க.க தலைவர்களை சிறையில் தள்ளும் பொருட்டு இரகசியப் பொலிஸ் உளவாளிகளைப் பயன்படுத்தி நடாத்திய ஆத்திரமூட்டல்களின் கீழ் பொய் வழக்குத் தொடுக்கவும் சி. ல.சு.க.—சமசமாஜ—ஸ்டாலினிச அரசாங்கம் முயன்றது, இந்தச் சகல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் 'கம்கறு மாவத்த', 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகளை வெளியிடுவதை நோக்கி முன்சென்ற பு.க.க., அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் முகமாக தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் பிரச்சார இயக்கத்தினை தீவடங்கிலும் ஆரம்பித்தது. ஜேவீபி யுடன் ஈடு செய்ய முடியாத அரசியல் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்த போதிலும் ஒடுக்கப்படும் இளைஞர்களின் குட்டி முதலாளித்துவ இயக்கமான அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் அரச ஒடுக்கு முறைக்கு எதிராக பு.க.க. கொள்கை சார்ந்த விதத்தில் கிளர்ந்து எழுந்தது அது ஜேவீபி யை பூதாகாரப்படுத்தி அதன் குட்டி முதலாளித்துவ—ஏகாதிபத்திய முதலாளித்துவச் சார்பு அரசியலினைப் பலப்படுத்த தொழிற்பட்ட தம்பு—சமரக்கொடி தலைமை, அரச ஒடுக்குமுறையின் முன்னால் தலைகுனிந்து நின்ற தருணமாகும். இன்றைய நவசமசமாஜ தலைவர்கள் உட்பட சமசமாஜ—ஸ்டாலினிசத் தலைவர்கள் முழுப்பேரும் அந்த அரச ஒடுக்கு முறையின் அலுகோசு கையாட்களாக மாறி நின்றனர். ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வேலைத் திட்டத்தினை முன்வைக்கவும், அதன் அடிப்படையில் போராட்டத்துக்குக் கிளர்ந்து எழவும், தொழிலாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தினால் மட்டுமே முடியும் என்பது இங்கு சக்தி வாய்ந்த முறையில் பிரத்தியட்சமாகியது. தொழிற்சங்க இயக்கத்தின் உள்ளே பிரச்சாரத்தில் ஈடுபட்டும், பிரேரணைகள் நிறைவேற்றியும், முழுத் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் சார்பிலும் தோள் கொடுக்க வேண்டிய புரட்சிகரப் பணியினை அவர்கள் இனங்கண்டு கொள்ள புகக இவ்வியக்கத்தினை நடாத்தியது. இப்போராட்டம் தொழிலாளி வர்க்கத்தினை தொழிற்சங்கக் கைவிலங்குகளில் இருந்து விடுவித்து, புரட்சிகரப் பாதையில் காலடி வைக்கச் செய்யும் ஒரு போராட்டமாகியது,

சமசமாஜ—ஸ்டாலினிசக் காட்டிக் கொடுப்புக்களின் பெறுபேறாக தொழிற்சங்க சின்டிக்கல் வாதத்தினுள் சிறைப்பட்டுக் கிடந்த தொழிலாளர்களுக்கு தொழிலாள வர்க்கம் ஸ்தம்பித்துப் போய்க் கிடப்பதாக காட்ட அந்தத் துரோக அதிகாரத்துவங்கள் தினமும் முயன்றன.

தொடரும்

## கமிட்டி அமைக்கப் பட்டதற்கு நன்றி..

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

யின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி அஜித் ரத்நாயக்காவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்யாணிகுமாரி கூறியதாவது:

"நாம் இருக்கையில் டாக்டர்கள் எவரும் மரண விசாரணை செய்யவில்லை. தலை சிதறுண்டதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது. ஜூன் 5ம் திகதி இடம்பெற்ற விசாரணையில் மஜிஸ்திரேட் இரண்டு தொழிலாளர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தார். அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான மேற்பார்வையாளர் திரு. திசாநாயக்கவிடமும் சாட்சி பெறப்பட்டது. எனினும் இயந்திரத்துக்குப் பொறுப்பாக இருந்த மாஜி மேற்பார்வையாளர் அழைக்கப் படவில்லை. இயந்திரத்தில் வேலை செய்யும்படி நெருக்கியவர் அவர் தான். இந்த இயந்திரத்தில் வேலை செய்யப் பிரேமலால் மறுத்ததாக சகோதர தொழிலாளரிடம் இருந்து அறிந்து கொண்டேன். இந்த இயந்திரத்தில் முன்னர் வேறோர் தொழிலாளி வேலை செய்தார். அவரின் உற்பத்தி குறைவாக இருக்கிறது என்றே பிரேமலால் அதில் வேலை செய்யும்படி வேண்டப்பட்டார்.

"விபத்துக்குள்ளான வேளையில் பிரேமலாலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல ஒரு வாகனமும் இருக்கவில்லை. விபத்து இடம்பெற்றதுமே அவர் இறந்து போனாரா என்பதைப் பற்றி எமக்கு எதுவும் கூறப்படவில்லை. சகோதரத் தொழிலாளர்கள் அவரைத்தூக்கி நிமிர்த்த முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை எனச் சொல்லப்பட்டது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது அவர் இறந்து போனார்."

கொரியா—சிலோன் பக்டரியின் சேவை நிலைமை பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் கல்யாணி பின்வருமாறு குறிப்பிட்டார்: "பக்டரியில் சேவையில் ஈடுபடும்போது நிர்வாகிகளின் மிரட்டல்கள் இடம்பெறுவதுண்டு. மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் உற்பத்தி இலக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். தொழிலாளர்கள் தாக்கப்படும் தருணங்களும் உண்டு. நான் இருந்த சமயத்திலும் அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றதுண்டு முன்னர் சம்பளம் ரூபா 1550/- இப்போது ரூபா. 2000/-."

விசாரணைக் கமிட்டி அங்கத்தவர் என்ற முறையில் பகிரங்க விசார்ணையில் மேலும் விடயங்களைத் தெளிவுபடுத்தத் தாம் தயாராக இருப்பதாக கல்யாணிகுமாரி தெரிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# ஐரோப்பாவில் இயங்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அமைப்பின் வாழ்த்து செய்தி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐரோப்பிய வெளிநாட்டுக் கிளையின் அங்கத்தவர்களான நாம் எமது கட்சியின் 25வது ஆண்டு நிறைவினைப் பெருமையுடன் கொண்டாடும் எமது இலங்கைத் தோழர்களை இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம். புன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரின் (B S A.) நெருங்கிய இணைச் சகாக்கள் என்ற முறையில் அதன் தேசியச் செயலாளர் உல்றிச் றிப்பேர்ட் இந்த ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

அனைத்துலகக் குழு, போல்ஷிவிக் புரட்சியும் சோவியத் அரசும் தோன்ற வழிவிட்ட ஆழமான ஏகாதிபத்திய முரண்பாடுகள் எதையும் சோவியத் யூனியனின் வெடிப்புத் தீர்த்துவிடவில்லை என ஆய்ந்தது. மாறாக இந்த வெடிப்பு முன்னைய சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் மட்டுமன்றி அனைத்துலக மட்டத்தில் இந்த ஏகாதிபத்திய முரண்பாடுகளை உக்கிரமாக்கி உள்ளது.

ஸ்டாலினிச அதிகாரத்துவம் அதனது 'தனிநாட்டில் சோசலிசம்' என்றபிற்போக்குத் தேசியவாத வேலைத்திட்டத்துடன் அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துக்கு எண்ணற்ற தோல்விகளை ஒழுங்கு செய்ததோடு தனது வாழ்நாள் பூராவும் உலக ஏகாதிபத்தியத்தின் முண்டுகோலாகச் சேவை புரிந்தது. உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அமைப்பின் சமபல நிலையை சிருஷ்டிப்பதானது ஒரு புறத்தில் அமெரிக்காவின் சார்பு ரீதியான பொருளாதார பலத்தினையும் மறுபுறத்தில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களை அனைத்துலக ரீதியில் நசுக்குவதில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் வழங்கிய பரந்த ஆதரவினையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இந்த வெடிப்பு, முதலாளித்துவ அபிவிருத்திக்குத் தன்பாட்டில் ஒரு செழிப்பினை உருவாக்கி விட்டுவிடவில்லை. மாறாக இது இரண்டாம் உலக யுத்தத்தின் அழிபாடுகளில் இருந்து முதலாளித்துவ அமைப்புக் கட்டியெழுப்பப்பட வழிவகுத்த யுத்தத்தின் பின்னைய உடன்படிக்கைகளுக்கு மரணஅடி கொடுத்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் — சோவியத் யூனியனின் வெடிப்பின் பின்னர் மார்க்சிசத்தின் மரண கீதம் இசைப்பதில் கூடிநின்ற சகல முதலாளித்துவ வெகுஜன தொடர்புச் சாதனங்களும் மேதாவிகளும் இன்று பரிதாபமான முறையில் தமது பக்கங்களை உலக முதலாளித்துவ அமைப்பின் வங்குரோத்தினால் நிரப்புகிறார்கள்.

உலக ஏகாதிபத்தியம் மீண்டும் அம்மணமான காலனித்துவத்தில் இறங்கும் வண்ணம் நெருக்கப்பட்டுள்ளது. அமெரிக்க யுத்த விமானங்கள் சமீபத்தில் சோமாலியாவில் நடாத்திய குண்டுவீச்சுக்கள் தனிமைப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல, இது ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க ஒடுக்கப்படும் மக்களைக் காலனிததுவ முறையில் அடிமைப்படுத்துவதற்கான ஒரு தெளிவான சமிக்கையாகும். சகல பெரும் ஏகாதிபத்தியச் சக்திகளும் 1930 பதுகளில் ஏற்பட்டதை விட மோசமான பேரழிவுமிக்க பொருளாதார மந்தநிலலக்கும் தமது சொந்த நாடுகளில் மோசமான சமூக நெருக்கடிக்கும் முகம் கொடுத்த வண்ணம் மூலப் பொருட்களைக் கட்டுப்படுத்தவும் மலிவான உழைப்புச் சகதிக்காகவும் காலனித்துவம் பக்கம் திரும்பி உள்ளனர். ஏகாதிபத்தியச் சக்திகளிடையே உலகச் சந்தைக்கான இப்போராட்டம் ஒரு இராணுவ எதிர்கொள்வினை நோக்கி அதிகளவில் வளர்ச்சி கண்டு வருகின்றது. பொஸ்னியா பற்றி அமெரிக்காவுக்கும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த வாரம் இடம்பெற்ற வாக்குவாதங்கள் முன்னைய யூகோசலாவியாவில் ஒரு எதிர்கால இராணுவத் தகராறுக்கான ஒரு சமிக்கை மட்டுமே.

இந்த அபிவிருத்திகளில் தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் புதிய ஏகாதிபத்திய காட்டுமிராண்டித் தனத்தின் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளனர். தொழிலாளி வர்க்கத்தின் பாரம் பரிய அமைப்புக்கள் தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களைக் காக்கும் அமைப்புக்களாக பூரணமாகப் பரிணாமம் கண்டுள்ளன. தொழிற்சங்கங்கள் பன்னாட்டுக் கம்பனிகளுக்கு இடையேயான வர்த்தக யுத்தத்தில் தொழிலாளி வர்க்கத்தினை பிரித்து ஒடுக்கும் கோபரேட்வாத ஆயுதங்களாகச் செயற்படுகின்றன, முதலாளித்துவச் சமுதாயத்தில் தமது சமூக அடிப்படையை பேணும் அவசியத்துக்கு முகம் கொடுக்கும் நிலையில் இந்த அதிகாரத்துவங்கள் தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களையிட்டும் அக்கறை செலுத்துவதாய் இல்லை. ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சி 1989ல் ஜேர்மனியின் முதலாளித்துவ இணைப்பின் போது இலட்சோப லட்சம் தொழில்கள் அழிக்கப்படுவதற்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் கிளர்ச்சியின் ஒவ்வொரு முயற்சியையும் தடை செய்யவும் நசுக்கவும் முக்கிய பாத்திரம் வகித்தது. இதைத் தொடர்ந்து சமூக ஜனநாயக் கட்சி 1992 கோடைக் காலத்தில் அரசியல் அடைக்கலத்தினை ஒழிக்கவும், ஜேர்மன் இராணுவத்தினை அனைத்துலக ரீதியில் நிறுத்தவும். ஜேர்மன் அரசாங்கத்துடன் ஐக்கிய உடன்படிக்கை செய்யவும் தீர்மானம் செய்தது. இந்தத் தீர்மானங்களை எடுத்ததன் பின்னர் ச.ஜ.க. ஜேர்மனியில் தொழிலாளி வர்க்கதின் மீதான பிரமாண்டமான தாக்குதல்களுக்கு மட்டுமன்றி அடைக்கலம் கோருவோருக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுககும் எதிராக வளர்ச்சி கண்டுவரும் பாசிசத் தாக்குதல்களுக்கும் முழுப் பொறுப்பு ஏற்றாகவேண்டும்.

அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துக்கான ஒரே வழி இந்த பழைய அதிகாரத்துவ இயந்திரங்களில் இருந்து அரசியல், அமைப்பு ரீதியில் உறவுகளைத் துண்டித்துக் கொள்வதே. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுவதற்கான முன்நிபந்தனைஇதுவே. இங்குதான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆண்டு நிறைவின் சிறப்பு முக்கியதத்துவம் உள்ளது. பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராக மார்க்சிசம் காக்க 25 ஆண்டுகளுக்கு முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. பப்லோவாத திரிபுவாதத்தின் அடிப்படை கருத்துப்பாடு: சோசலிசப் புரட்சி தொழிலாளி வர்க்கத்தின் ஒரு நனவான போராட்டத்தின் விளைவு அல்ல. பல்வேறு சமூக சக்திகளும் அரசியல் போக்குக்களும் மனித இனத்

(19ம் பக்கம் பார்க்க)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய தொழிற்சங்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஞாபகார்த்தக் கூட்டத்தில் தெரிவித்தார். ''இதைக் கேட்கையில் எனக்கு திருப்தியற்ற உணர்வு ஏற்பட்டது'' என இதைப்பற்றி கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

பல்வேறு ஊக்குவிப்புக்கள், வரி குறைப்புக்கள் வேறு வகையான சலுகைகளைத் தொடர்ந்து, கைத்தொழில் மயமாக்க அபிவிருத்திக்காக மாநிலங்களுக்கு இடையேயான போட்டி உக்கிரமடையும் போது தனது இன்றைய சேவை கலாச்சாரத்துடன் அதற்கு முகம் கொடுக்க மேற்கு வங்காளத்தால் முடியவில்லை.

தொழிற்சங்கவாதிகள் உரிய சேவை கலாச்சாரத்தினைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அவர்கள் தமது தொழிற்சங்க உரிமைகள் சம்பந்தமாக நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் பாசு கேட்டுக் கொண்டார், தொழிலாளர்கள் 'அநீதியாக' நடந்து கொண்டால் அவர்களுக்கு துப்பாக்கி வேட்டு வைக்க பாசு தயங்கப்போவதில்லை, மேற்கு வங்காள அரசாங்கத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ததால் பாசுவின் பொலிசார் 8 தொழிலாளர்களை கொன்ற ஹரிஹார்பரா சம்பவம் இதைத் தெளிவுபடுத்துகின்றது.

இந்தியா பூராவும் அவ்வாறே உலகம் முழுவதிலும் இந்தப் பிராந்தியவாத போக்கின் வளர்ச்சியை கண்டு கொள்ள முடிகிறது. பிராந்திய வாதத்தினைப் போலவே பொருளாதார தேசியவாதமும் பூமி தட்டையானது என்பதைப் போன்ற ஒரு மூடப் பேச்சாகும், சுதந்திர வலயங்கள் எனப்படுபவையும் சகல குட்டி அரசுகளும் பூகோள ரீதியில் செயற்படும் ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படும் சுதந்திரச் சுரண்டல் வலயங்களாகப் பரிணாமம் அடைவது தவிர்க்க முடியாதது.

தொழிலாளி வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் உள்ள ஒரே எதிர்கால வழி தொழிலாளி வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியமே. வேறு எந்தவொரு மார்க்கமும் கிடையாது. உலக சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தினை நோக்கி முன் செல்வோம்.

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நீடூழி வாழ்க!

★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நீடூழி வாழ்க!

நன்றி தோழர்களே.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா

## விஜேதுங்க அரசா..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, தமிழீழம் —இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சிக்குக் கொணர்வதே தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் முன்னுள்ள ஒரே நிஜ வேலைத் திட்டமாகும்.

இனவாத யுத்தம் வேண்டாம்! யுத்தத்துக்கு ஒரு ஆளோ, ஒரு சதமோ, ஒரு சருவியோ வழங்காதே! இலங்கை படைகளை வடக்கு—கிழக்கில் இருந்து வெளியேற்று! இனவாத வேட்டையை நிறுத்து! என்ற தீர்க்கமான பிரச்சாரத்தில் ஈடுபடுவதன் மூலம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் வடக்கு—கிழக்கு மாகாணங்களின் தொழிலாளர் வர்க்கத்துடன் மேற்சொன்ன வேலைத் திட்டத்துக்கான போராட்ட ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முன்சென்றாக வேண்டும் அவ்வாறே தமிழீழம் பிராந்தியங்களில் விடுதலைப் புலிகளதும் மற்றும் தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களதும் ஜனநாயக உரிமைகளைத் தவிடுபொடியாக்கும் நடவடிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலம் முதலாளித்துவ வர்க்க எதிரிக்கு எதிராகப் போராடும் தமது சொந்த அமைப்புக்களாக நடவடிக்கைக் கமிட்டிகளையும் சோவியத் சபைகளையும் கட்டி எழுப்பப் போராடுமாறு அப்பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை நாம் வேண்டுகின்றோம்.

இப்போராட்டத்துக்கு அனைத்துலகவாதப் புரட்சிகரத் தலைமை அவசியம். அது இந்த வேலைத்திட்டத்தினை முன்வைத்துப் போராடிவரும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமாகும். இலங்கையையும் தமிழீழத்தையும் தழுவிய விதத்தில் இக்கட்சியைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

## சோசலிச அனைத்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் புகழ் பெற்ற 25 ஆண்டு கால போராட்ட வரலாற்றைக் கொண்டுள்ள போதிலும் நாம் இன்னமும் வெற்றி கொள்ள வேண்டியவை நிறைய இருப்பதாகவும் விஜே. மேலும் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசிய 'கம்கறு மாவத்த' ஆசிரியர் கே. ரத்னாயக்க 'புரட்சிகர மார்க்சிசத்துக்காக கடந்த 25 ஆண்டுகளாக பு.க.க, வினால் தொடர்ந்து போராட முடிந்ததற்கும் அந்த பதாகையுடன் இன்று கிளர்ந்து எழ முடிந்துள்ளதற்கும் காரணம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையாக ஆரம்பிக்கப்பட்டு அந்த அத்திவாரத்தில் போராட்டத்தினை நடாத்தி வருவதேயாகும்' என்றார்.

பு.க:க. இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கத் தேசியச் செயலாளர் தோழர், தீபால் ஜயசேகரவும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்.

## இவ் விசாரணை பிரேமலால்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கும், இதன் மூலம் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அவர்களை ஐக்கியப்படுத்த வாய்ப்பு ஏற்படும்...

சுயாதீன தொழிலாளர் விசாரணையின், பகிரங்க விசாரணை ஆகஸ்ட் 25ல் ஆரம்பமாகும் எனக் குறிப்பிட்ட விலானி, விசாரணை நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். விசாரணைக் கமிட்டியின் ஆய்வுக்கு உள்ளாகும் நானாவித துறைகள் பற்றியும் சாட்சியமளிக்கத் தயாரானவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

தோழி. விலானி பீரிசின் அறிக்கையைத் தொடர்ந்து, காலஞ் சென்ற பிரேமலால் ஜயக்கொடியின் மனைவி கல்யாணி, சு.வ,வ. பெண் தொழிலாளி, இரசாயனத் தொழிற்சார் நிபுணர், புகக மத்திய குழுவினதும, அனைததுலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியினதும் உறுப்பினருமான டபிள்யூ. ஏ. சுனில், மத்திய வங்கி ஊழியர் சங்க செயலாளர் எச். எம். பி. ஹேரத் ஆகியோர் சாட்சியம் அளித்தனர். விசாரணை கமிட்டியின் சட்ட ஆலோசகரான வழக்கறிஞர் அஜித் ரத்நாயக்க பேசுகையில் பிரேமலாலின் மரணத்தின் நிஜ நிலைமையைப் பூசி மெழுக பொலிசாரும் பக்டரி நிர்வாகிகளும் தொழிற்படும் முறையைத் தெளிவு படுத்தினார்.

படிப்பகம்